நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தலையங்கம்: பாழாகும் விளைநிலங்கள்!**

First Published : 23 Aug 2011 05:22:32 AM IST

சுதந்திர தினத்தன்று உரையாற்றிய பிரதமர் மன்மோகன் சிங், உணவு உற்பத்தியில் இந்தியா சாதனை படைத்திருப்பதைப் பெருமையுடன் குறிப்பிட்டார். உண்மைதான். கடந்த இரு ஆண்டுகளாக உணவு உற்பத்தி நன்றாகவே இருக்கிறது. உணவுப் பொருள் கையிருப்பும்கூட வழக்கத்தைவிட அதிகமாகவே உள்ளது.

÷உணவு மற்றும் விநியோக அமைச்சகத்தின் அறிக்கையில் அரிசி கையிருப்பு 268 லட்சம் டன், கோதுமை கையிருப்பு 371 லட்சம் டன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 639 லட்சம் டன். இந்த அளவு வழக்கமான கையிருப்பாகிய 319 லட்சம் டன் உணவு தானியத்தைப்போல இரு மடங்கு! உணவுப் பொருள்கள் தற்போது கையிருப்பில் உள்ளதென்பது பிரதமருக்கு மட்டுமல்ல, இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்திதான்.

÷இருப்பினும், இந்த வேளையில் நிகழ் நிதியாண்டில் இதுநாள் வரை உர நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உர மானியத்தின் அளவைப் பார்க்கும்போது மலைப்பாக இருப்பதோடு, கவலை தருவதாகவும் இருக்கிறது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

இந்த உர மானியம் நேரடியாக உர நிறுவனங்களுக்கு அளிக்கப்படும்போது, இதனால் நிறுவனங்கள் அடையும் லாபம் அதிகமாகவும், விவசாயி பெறும் நன்மை குறைவாகவும் உள்ளது என்பது முதல் காரணம்.

÷மானிய விலையில் கிடைக்கும் யூரியா உரத்தை மிக அதிகமாகப் போட்டு இந்திய விவசாயிகள் தங்கள் நிலத்தைப் பாழாக்கி விட்டார்கள். இந்த நிலைமை மாற்றப்படாவிட்டால், இதே உற்பத்தி நீடிக்குமா என்பது சந்தேகம்தான் என்று வேளாண் வல்லுநர்கள் தரும் தகவல்கள் இரண்டாவது காரணம்.

÷யூரியா, பொட்டாசியம், பாஸ்பேட் என அடிப்படை உரங்களுக்காக இந்திய அரசு மானியம் வழங்குகிறது. இந்த மானியம் 2009-10-ம் ஆண்டில் ரூ. 64,032 கோடி, 2010-11-ம் ஆண்டில் ரூ. 65,836 கோடி என்று உர நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த உரங்களுக்கு மானியம் அளிக்கப்பட்டாலும், இவை விநியோகத்துக்கு வந்து, விவசாயிகளைச் சென்றடையும்போது, அரசு நிர்ணயிக்கும் விலையைவிட அதிகவிலை கொடுத்து வாங்கும் நிலைதான் இன்றளவும் உள்ளது. இதற்காக எத்தனை புகார்கள், போராட்டங்கள் நடைபெற்றாலும் விவசாயி அதிக விலை கொடுப்பதும், உரங்கள் பதுக்கப்படுவதும் தொடர்கதையாகவே இருக்கிறது.

இந்த உர நிறுவனங்கள் தரமான உரங்களைத் தயாரிப்பதில்லை என்கிற புகார்கள் ஒருபுறம், இவை தொழில்நுட்பத்தைப் புதுப்பிக்காமல் பழைய நிலையிலேயே உரங்களைத் தயாரித்து, சுற்றுச்சூழல் மாசுக்குக் காரணமாகின்றன என்பது இன்னொருபுறம். ஆனால், அதுபற்றி அரசு எந்தக் கவலையும் கொள்வதில்லை.

÷ரசாயனத் துறை மற்றும் உரங்கள் அமைச்சகம் தரும் புள்ளிவிவரத்தின்படி, சந்தை மதிப்பில் யூரியாவின் அதிகபட்ச விலையான ரூ.5,310 (ஒரு டன்) என்பதில் விவசாயிக்கு 27 முதல் 58 விழுக்காடு வரை பயன் கிடைக்கும் வகையில் மானியம் அளிக்கப்படுகிறது என்றுதான் சொல்லப்படுகிறது. ஆனால், இந்த அதிகபட்ச விற்பனை விலை என்பதை யார் தீர்மானிக்கிறார்கள், எப்படித் தீர்மானிக்கிறார்கள் என்பது அரசுக்கே வெளிச்சம்.

இந்திய விவசாயிகளுக்கு உரம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் உர ஆலைகளுக்கே நேரடியாக மானியம் வழங்கும் திட்டத்தைக் கொண்டுவரச் சொல்லப்பட்ட காரணம், இந்தியா முழுவதும் சிதறியுள்ள விவசாயிகளுக்குத் தனித்தனியாக மானியம் நேரடியாகக் கிடைக்கச் செய்வது இயலாது என்பதுடன், அது ஊழலில் போய் முடியும் என்பதுதான். அதனால்தான் உர நிறுவனங்களுக்கே நேரடியாக மானியத்தை அளிக்க முடிவு செய்தது அரசு.

உரத்தின் அதிகபட்ச விலையைத் தீர்மானிக்கும்போது, அந்த நிறுவனத்தின் முதலீட்டுக்கு, வரிக் கழிவுகள் நீங்கலாக, 12 விழுக்காடு லாபம் கிடைக்கும் வகையில் விலை நிர்ணயம் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், இப்போது அந்த அடிப்படையில்தான் உர நிறுவனங்களால் இந்த விலைகள் தீர்மானிக்கப்படுகின்றனவா என்பது பரம ரகசியம். அது பற்றிய கேள்விகள் எழாமல் இருப்பதற்காகவோ என்னவோ, உர நிறுவனங்கள் தங்களுக்கு 3 விழுக்காடு லாபம்தான் கிடைக்கிறது என்று தங்களுக்கான ஆதரவுக் குரலைத் திரட்டிக் கொண்டிருக்கின்றன, மக்கள் மத்தியில் கொண்டுபோய்ச் சேர்த்துக் கொண்டிருக்கின்றன.

விவசாயியின் நன்மைக்காகவும், உணவு உற்பத்தியை உறுதி செய்வதற்காகவும் உரத்துக்கு அரசு அளிக்கும் மானியத்தை, உர நிறுவனங்கள் அதிகமாகவே பெற்று நன்றாக இருக்கின்றன என்பதுதான் கசப்பான உண்மை. இந்த உரத்தை, குறிப்பாக யூரியா உரத்தை, சலுகை விலையைவிடக் கூடுதலான விலைக்கு வாங்கி நிலத்துக்குப் போட்டு, தானும் பாழாகி, நிலத்தையும் பாழாக்கிக்கொண்டு வருகிறார்கள் நமது விவசாயிகள் என்பதும் கசப்பான உண்மை. இதுபற்றி எந்தவிதமான விழிப்புணர்வையும் அரசு ஏற்படுத்தவில்லை என்பது அதைவிடக் கொடுமையான உண்மை.

இந்திய விளைநிலங்களில் யூரியாவின் பயன்பாடு மிக அதிகமாக இருப்பதால், நமது விளைநிலங்களின் உற்பத்தித் திறன் குறைந்துள்ளது என்கின்றன ஆய்வுகள். இந்தியாவில் ஒரு ஹெக்டேர் நிலத்தில் 3.4 டன் நெல் உற்பத்தியாகிறது என்றால், சீனாவில் இதே ஒரு ஹெக்டேர் நிலத்தில் 6.5 டன் நெல் உற்பத்தியாகிறது. இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, இந்திய விவசாயிகள் உரத்தை அதிகமாகப் போட்டதுதான் என்கிறார்கள்.

÷இந்த உர மானியத்தை உரம் தயாரிக்கும் நிறுவனங்களுக்குக் கொடுப்பதைப் படிப்படியாகக் குறைக்கும் அதே நேரத்தில், பாரம்பரிய வேளாண்மைக்கு இந்த மானியத்தை கொண்டுபோய்ச் சேர்த்து ஊக்கப்படுத்தவும் பாரம்பரிய வேளாண்மையை மீட்டெடுக்கும் விழிப்புணர்வை இந்தியா முழுவதும் ஏற்படுத்தவும் தேவையான முயற்சிகளை அரசும், ஊடகங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் முடுக்கி விட்டால், விளைநிலங்கள் முற்றிலும் பாழாகிவிடும் முன்பாக மீட்டு விடலாம். விவசாயியும் மீட்கப்படுவார். விவசாயி வாழ்ந்தால் மட்டும்தான் நாடு வாழும்!

**சொட்டு நீர்ப் பாசனத்தில் மாஞ்செடி அடர் நடவு தோட்டக்கலை; உதவி இயக்குநர் ஆய்வு**

First Published : 22 Aug 2011 02:38:38 PM IST

விழுப்புரம், ஆக. 21: விக்கிரவாண்டி ஒன்றியம், ரெட்டிக்குப்பத்தில் சொட்டுநீர்ப் பாசனத்தில் அடர் நடவு முறையில் நடவு செய்த மாஞ்செடிகளை கோலியனூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் வீராசாமி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

÷தேசிய தோட்டக் கலை இயக்கத் திட்டத்தின் கீழ் இக்கிராமத்தைச் சேர்ந்த எல்.பிரகாஷ் 7.5 ஏக்கர் பரப்பளவில் மாஞ்செடிகள் அடர்நடவு முறையில் நடவு செய்தார். ÷இதை உதவி இயக்குநர் க.வீராசாமி பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார். இந்த சாகுபடி செய்த விவசாயிக்கு தேசிய தோட்டக் கலை இயக்கத் திட்டத்தின் கீழ் ரூ.72 ஆயிரம் மானியத்தில் மரக்கன்றுகளும், இடுபொருள்களும், ரூ.67,820 மானியத்தில் சொட்டு நீர்ப் பாசன கருவிகளும் தோட்டக்கலைத் துறையின் மூலம் வழங்கப்பட்டன.

÷மேலும் இதே முறையில் சாகுபடி பணியை மேற்கொண்ட செ.புதூர் கிராமத்தைச் சேர்ந்த துரைபாபு, சின்னத்தச்சூர் கிராமத்தைச் சேர்ந்த கணேஷ் ஆகியோரின் தோட்டத்தை பார்வையிட்டு, 4 ஆண்டுகளுக்கு மேல் ஆண்டுக்கு ஏக்கருக்கு சராசரியாக 3000 கிலோ மகசூல் மூலம் ரூ.81,000 ஆயிரம் வரையில் ஆண்டு வருமானம் பெருவதற்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளதை கேட்டறிந்தார்.

÷இந்த ஆய்வின்போது, உதவி வேளாண்மை அலுவலர்கள் தட்சிணாமூர்த்தி, பொன்.மாரியப்பன், எஸ்.கலைச்செல்வி ஆகியோர் உடனிருந்தனர்.÷

விக்கிரவாண்டி ஒன்றியத்தில் சொட்டுநீர்ப் பாசன முறையில் மா அடர் நடவு முறையில் சாகுபடி செய்ய வேளாண்மை உதவி அலுவலர்கள் விக்கிரவாண்டி தட்சிணாமூர்த்தி எண்.9865956047, பொன்.மாரியப்பன் எண்.9629610404, கலைச்செல்வி எண்.9585248045 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி**

First Published : 22 Aug 2011 10:22:34 AM IST

காரியாபட்டி, ஆக. 21: கோவிலாங்குளத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் சில்பாலின் பை மூலம் மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி நடைபெற்றது. இயற்கை வேளாண்மையின் அவசியம் குறித்து திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டி, சில்பாலின் பை மூலம் மண்புழு உரம் தயாரிப்பு தொழில்நுட்பம் குறித்து இணை பேராசிரியர் கண்ணன் விளக்கினர்.

தினமலர்

**பயிரிடும் பரப்பளவு கடந்த ஆண்டை விட அதிகரிப்பு**

ஆகஸ்ட் 23,2011,00:28



புதுடில்லி: நாடு முழுவதும் பருவமழை பரவலாக பெய்து வருவதால், நெல்,பருத்தி உள்ளிட்ட பயிர்களை பயிரிடும் பரப்பளவு அதிகரித்து வருகிறது. இதனால், நடப்பு பயிர் பருவத்தில், உணவு தானியங்களின் விளைச்சல் சிறப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.தேசிய வானிலை ஆய்வு மையம், அதன் முன்கூட்டிய மதிப்பீட்டில், ஆகஸ்ட் - செப்டம்பர் மாதங்களில், நாட்டில் பருவமழை பொழிவு, வழக்கத்தை விட குறைவாகவே இருக்கும் என்று தெரிவித்திருந்தது. மேலும், ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை, ஒட்டுமொத்த அளவில் பருவமழை பொழிவில் சராசரியாக 4 சதவீதம் பற்றாக்குறை உண்டாகும் என்று மதிப்பிட்டிருந்தது.இந்நிலையில், கடந்த சில வாரங்களாக நாட்டில் பரவலாக நல்ல அளவில் மழை பொழிந்து வருகிறது. குறிப்பாக, பஞ்சாப், ஹரியானா, மேற்குஉத்தரபிரதேசம் ஆகிய வட மேற்கு மாநிலங்களில் வழக்கத்தை விட 74 சதவீதம்கூடுதலான மழை பொழிவு பதிவாகியுள்ளதாக, தேசிய

வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால், நெல், கோதுமை, கரும்பு உள்ளிட்ட முக்கிய உணவுப் பயிர்கள் பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளது.சென்ற வெள்ளிக்கிழமை வரையிலுமாக, நாட்டின் மழை பொழிவு, வழக்கத்தை விட 26 சதவீதம் அதிகமாக இருந்ததாக, இம்மையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், நெல்,மக்காச்சோளம் உள்ளிட்டவற்றை அதிக அளவில் பயிரிட்டு வரும் கிழக்கு பிராந்தியத்திலும், கடந்த வாரம், வழக்கத்தை விட 36 சதவீதம் அதிக மழை பொழிந்துள்ளது.

வரும் வாரங்களிலும், பருவ மழை சிறப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், நாடு முழுவதும் உணவு தானியங்கள் பயிரிடும் பரப்பளவு அதிகரித்து வருகிறது.பருவமழை வழக்கத்தை விட குறைவாக இருக்கும் என்ற முந்தைய கணிப்பின் அடிப்படையில், விதைப்பு பணிகளில் ஆர்வம் காட்டாமல் இருந்து வந்த விவசாயிகள், தற்போது ''று''றுப்பாக வேளாண் பணிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.இதனால் வரும் வாரங்களில், நாட்டின் உணவு தானியங்கள் பயிரிடும் பரப்பளவு கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.மத்திய வேளாண் அமைச்சகத்தின் அண்மை கால மதிப்பீட்டின்படி, பருப்பு வகைகள் தவிர, இதர உணவு தானியங்கள் பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டின்படி, சென்ற 19ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், நாட்டின் நெல் பயிரிடும் பரப்பளவு 3.22 கோடி எக்டேராக உள்ளது. இது, சென்ற ஆண்டு இதே காலத்தை விட 8.36 சதவீதம் (2.99 கோடி எக்டேர்) அதிகமாகும்.எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு 2.63 சதவீதம் அதிகரித்து, 1.65 கோடி எக்டேரில் இருந்து 1.69 கோடி எக்டேராக உயர்ந்துள்ளது. நிலக்கடலையின் பங்களிப்பு குறைந்ததால், எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு மிகக் குறைந்த அளவிற்கே உயர்ந்துள்ளதாக வேளாண் அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர். மதிப்பீட்டு காலத்தில், நிலக்கடலை பயிரிடும் பரப்பளவு 40.60 லட்சம் எக்டேராக இருந்தது.

இது, கடந்த ஆண்டு இதே காலத்தில் 49 லட்சம் எக்டேராக இருந்தது.அதேசமயம், கரும்பு பயிரிடும் பரப்பளவு 4.76 சதவீதம் அதிகரித்து 49.3 0 லட்சம் எக்டேரில் இருந்து 51 லட்சம் எக்டேராக உயர்ந்துள்ளது. பருத்தி பயிரிடும் பரப்பளவும் 9.37 சதவீதம் உயர்ந்து 1.06 கோடி எக்டேரில் இருந்து 1.17 கோடி எக்டேராக அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும், கரும்பு மற்றும் பருத்தி பயிரிடும் பரப்பளவு கடந்த ஆண்டை விட அதிகரித்துள்ளது. எனினும் பருப்பு மற்றும் கம்பு,சோளம் போன்ற பயிர்களின் பரப்பளவு குறைந்துள்ளது. பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு 11.03 சதவீதம் குறைந்து 1.16 கோடி எக்டேரில் இருந்து, 99 லட்சம் எக்டேராக சரிந்துள்ளது.

நடப்பாண்டு நெல் சாகுபடி பரப்பு 4.20 -4.30 கோடி எக்டேராக இருக்கும் என்று

மதிப்பிடப்பட்டுள்ளது.கடந்த 2008-09ம் ஆண்டு இந்தியாவின் நெல் உற்பத்தி, 10 கோடி டன் என்ற சாதனை அளவைஎட்டியது. வறட்சி காரணமாக, அடுத்து வந்த ஆண்டுகளில் நெல் உற்பத்தி குறைந்திருந்தது. 2009 - 10ம் ஆண்டு நாட்டின் நெல் உற்பத்தி 8.90 கோடி டன்னாகவும், 2010-11ம் ஆண்டு 9.40 கோடி டன் என்ற அளவிலும் இருந்தது.சென்ற நிதியாண்டில், நாட்டின் வேளாண் உற்பத்தி, மதிப்பீடுகளை விஞ்சி 6.6 சதவீதம் அதிகரித்து, 23.59 கோடி டன் என்ற சாதனை அளவை எட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.அணைகள் நிரம்புகின்றன: கடந்த வார நிலவரப்படி, பருவ மழை பொழிவு பரவலான அளவில் உள்ளதால், நாட்டில் உள்ள 81 முக்கிய அணைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இந்த அணைகளில், கடந்த ஆண்டு, இதே காலத்தில் காணப்பட்டதை விட 137 சதவீதம் அதிகமாக நீர் இருப்பு உள்ளது. காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் நல்ல அளவில் மழை பெய்து வருவதால், உபரி நீர் வரத்தால் தமிழக அணைகளிலும் நீர் வரத்து அதிகரித்து வருகிறது.தமிழ்நாட்டில், இவ்வாண்டு வேளாண் உற்பத்தி அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு இலவசமாக தேக்கு மரக்கன்று வழங்கல் :வனத்துறை ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2011,01:03 IST

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வனத்துறை மூலம் மண் வள பாதுகாப்பு திட்டம் மூலம் தேக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதனால், மாவட்டத்தில் தனியார் நிலங்களில் தேக்கு மரங்கள் அதிக அளவில் வளர்க்கப்பட்டுள்ளது. வனப்பகுதியும், மலைக்குன்றுகளை அதிகம் கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் அரூர், ஒகேனக்கல், பாலக்கோடு ஆகிய வனச்சரக பகுதிகளில் அடர்ந்த வனங்கள் உள்ளன. இருப்பினும் வனப்பகுதியில் சமூக கும்பல்கள் பல்வேறு தேவைக்கு மரங்களை வெட்டி வருகின்றனர். வனத்துறை மூலம் வனப்பகுதியில் மரங்களை பாதுகாக்கவும், மண் வளத்தை பாதுகாக்கவும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு தேவையான இயற்கை உரங்கள், மண் புழு உரங்கள் ஆகியவற்றை வனத்துறை மூலம் தயார் செய்து விவசாயிகளுக்கு மிக குறைந்த விலையில் விற்பனை செய்து மண் வளத்தை பாதுகாக்கவும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வனத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மண் வள பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளில் பட்டா நிலங்களில் தேக்கு, புளி, பலா, குமுளி உள்ளிட்ட மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி மரங்களை வளர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்டம் முழுவதும் அனைத்து வன சரகங்களிலும் மண் வள பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 10 ஆண்டாக இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. நீர் ஆதாரங்கள் உள்ள விவசாய நிலங்களில் மரக்கன்றுகளை நட்டு பாராமரித்து வளர்க்க வனத்துறை உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது.

ஒரு விவசாயிகளுக்கு 500 மரக்கன்றுகள் வரையில் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. பாலக்கோடு வனச்சரகத்துக்கு உட்பட்ட பகுதியில் வயல் வெளி வரப்புகளில் தேக்கு மரங்கள் அதிக அளவில் இத்திட்டத்தின் கீழ் வளர்க்கப்பட்டிருப்பதை பார்க்க முடிகிறது. பாலக்கோடு வனச்சரகத்துக்கு இந்தாண்டு இத்திட்டத்தின் கீழ் 50,000 மரக்கன்றுகள் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 25,000 கன்றுகள் தயார் நிலையில் உள்ளது.

மேக்கனாம்பட்டி நாற்று பண்ணை அருகே இதற்கான கன்றுகள் வைக்கப்பட்டு நீர் நிர்வாகம் செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் பெற விரும்பும் விவசாயிகள் வனத்துறைக்கு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும். வனத்துறையினர் சம்பந்தப்பட்ட நிலத்தை ஆய்வு செய்து, அந்த நிலத்தில் உள்ள நீர் ஆதார அமைப்புகள் குறித்தது விவரங்கள் அறிந்து அதன் பின் மாவட்ட வன அலுவலர் மூலம் விவசாய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

பெரும்பாலான விவசாயிகள் தேக்கு மரங்களை வாங்கி செல்ல அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தேக்கு மரங்களுக்கு நல்ல விலை கிடைப்பதாலும், உயர் ரகமான தேக்கு மரசெடிகள் வனத்துறை மூலம் வழங்கப்படுவதால், தேக்கு கன்றுகளை அதிகம் நடுவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். பாலக்கோடு வனச்சரகத்தில் இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வளர்க்கப்படும் மரக்கன்றுகளுக்கு ஊக்கத்தொகையும் வழங்கப்படுவது குறிப்பிடதக்கது.

**நஞ்சில்லா தோட்டக்கலையில் பூச்சிகளை கட்டுப்படுத்த உதவி இயக்குனர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2011,00:15 IST

திருநெல்வேலி : தோட்டக் கலையில் பல்வேறு முறைகளில் பூச்சிகளை கட்டுப்படுத்தி இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மேலநீலிதநல்லூர் தோட்டக் கலை உதவி இயக்குனர் ராஜா முகம்மது தெரிவித்துள்ளதாவது: மண்ணை ஆழமாக உழும் போதோ அல்லது மண்ணை கிளறும் போதோ மண்ணில் வாழும் சில பூச்சிகள் புதைக்கப்படுகின்றன. கூட்டு புழுக்கள் அழிகின்றன. கொய்யா, முருங்கை போன்ற பயிர்களில் காணப்படும் பழ ஈக்கள், மிளகாய், தக்காளியில் பச்சை காய்ப் புழுக்களையும் கட்டுப்படுத்த வேண்டும். பயிரிடும் தேதியை மாற்றுவதின் மூலம் பூசணி பழ

ஈக்கள், செடி முருங்கையை தாக்கும் ஈக்களையும் கட்டுப்படுத்தலாம். தழைச் சத்தை பிரித்து இடுவதால் பூச்சிகளின் தாக்குதலை குறைக்கலாம்.

அதிகமாக சாம்பல் சத்து இட்டு மிளகாயில் அசுவணியை கட்டுப்படுத்தலாம். பழத் தோட்டங்களில் காணப்படும் சீத்தல் செடி, கொடிகளை அழிப்பதால் எலுமிச்சை, திராட்சை மற்றும் தக்காளியை தாக்கும் அந்திப் பூச்சியின் புழுக்களை அழிக்கலாம். பயிரை சுழற்சி முறையில் பயிரிடுவதின் மூலம் பல்வேறு பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். சிறிய அளவில் பயிரிட்டுள்ள பயிர்களில் புழுக்கள், வண்டுகளை சேகரித்து அழிக்கலாம். பூச்சிகளால் தாக்கப்பட்டு கீழே விழும் பழங்களை பொறுக்கி எடுத்து அழித்து சேதம் பரவாமல் தடுக்கலாம். உறையிடுதல், தகரங்கள் கட்டுதல், குத்தி எடுத்தஙல், இயற்பியல் முறைகளான வெப்பம், ஈரப்பதம், கதிர் வீச்சு, ஒலி, இடவசதி, கவர்ச்சி பொறிகள் ஆகியவை மூலம் பயிர்களை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தி, அழிக்கலாம்.

வேம்பில் இருந்து கிடைக்கும் பொருட்களான இலை, கொட்டை, எண்ணெய் ஆகியவை மூலம் மா தத்துப் பூச்சி, எலுமிச்சை இலை குடையும் புழு, செதில் பூச்சி, அசுவிணி, சப்போட்டோ இலை பிணைக்கும் புழு, மாதுளை பழ துளைப்பான், கத்தரி, தக்காளி, வெண்டை காய்ப் புழுக்கள், புகையிலை புழு, மிளகாய் இலைப் பேன் உட்பட பல்வேறு பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். பூச்சி மருந்துகளை நம்பாமல் பிற கட்டுப்பாட்டு முறைகளையும் தேவையான போது ஓருங்கிணைத்து பூச்சிகளை சிறந்த முறையில் கட்டுப்படுத்தி இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை வாழ்வோம். இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து நஞ்சில்லா தோட்டக் கலையை உருவாக்குவோம். இவ்வாறு உதவி இயக்குனர் தெரிவித்தார்.

**தண்ணீரின்றி கருகிய பயிர்களை வேளாண் துறை அதிகாரிகள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2011,00:11 IST

திருநெல்வேலி : பாளையங்கால்வாய்க்குட்பட்ட குறிச்சி அக்ரஹாரம் கீழ் பகுதியில் தண்ணீரின்றி கருகிய பயிர்களை வேளாண் துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். நெல்லை மாவட்டத்தில் உள்ள 7 கால்வாய்களுக்கும் கடந்த ஜூன் மாதம் தண்ணீர் திறக்கப்பட்டது. தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக பாளையங்கால்வாய் மற்றும் கோடகன்கால்வாய்களுக்கு மட்டும் சுழற்சி முறையில் தண்ணீர் விட பொதுப்பணித்துறையினர் முடிவு செய்தனர். இதன்படி பாளையங்கால்வாய் பகுதியில் கடந்த 12ம்தேதி வரை 19ம்தேதி வரை குறைந்தளவு தண்ணீர் திறக்கப்பட்டதால் மேடான மதகுகளுக்கு தண்ணீர் சென்றடையாததால் விளைநிலங்களில் வெடிப்பு ஏற்பட்டதோடு, பயிர்கள் கருகின. இது குறித்து கடந்த 19ம்தேதி நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள்

கூட்டத்தில் பாளையங்கால்வாய் விவசாயிகள் காய்ந்த பயிர்களை கலெக்டரிடம் காண்பித்து தொடர்ந்து தண்ணீர் திறந்து விட கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து கலெக்டர் செல்வராஜ், விவசாயிகளின் புகார் குறித்து சம்பந்தப்பட்ட விளைநிலங்களுக்கு நேரில் சென்று ஆய்வு நடத்துமாறு வேளாண் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதன்பேரில் நேற்று பாளையங்கால்வாய்க்குட்பட்ட குறிச்சி, அக்ரஹாரம் கீழ் பகுதியில் தண்ணீரின்றி கருகிய பயிர்களை வேளாண் துறை இணை இயக்குநர் தேவசகாயம், துணை இயக்குநர் குமாரசாமி, உதவி இயக்குநர் வெள்ளைப்பாண்டி, வேளாண் துறை அலுவலர்கள் இசக்கியப்பன், ஞான தீபா, உதவி அலுவலர் ராமச்சந்திரன் , பாளையங்கால்வாய் பகிர்மான குழு உறுபினர் கணேசன் மற்றும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சேர்ந்து கூட்டாய்வு நடத்தினர்.

இது குறித்து வேளாண் இணை இயக்குநர் தேவசகாயம் கூறியதாவது: கலெக்டர் உத்தரவின் பேரில் குறிச்சி பகுதியில் தண்ணீரின்றி கருகிய பயிர்களை ஆய்வு செய்தோம். இந்த ஆய்வில் சுமார் 15 ஏக்கர் நிலம் தண்ணீரின்றி பாதிக்கப்பட்டுள்ளது. கருகிய பயிர்களை காப்பாற்ற வரும் 26ம்தேதிமுதல் செப். 1ம்தேதி வரை பாளையங்கால்வாயில் கூடுதலாக தண்ணீர் திறக்க பொதுப்பணித்துறை அதிகாரிக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு தேவசகாயம் தெரிவித்தார்.

**இலஞ்சி பகுதியில் விவசாய பணிகள் தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2011,00:11 IST

குற்றாலம் : இலஞ்சி பகுதியில் விவசாய பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. நெல்லை மாவட்டத்தின் மேற்கு பகுதிகளில் உள்ள விவசாயிகள் கார்சாகுபடி, பிசான சாகுபடி என வருடத்தில் இருமுறை விவசாய பணிகளை மேற்கொண்டனர். தற்போது நெல்லை மாவட்டத்தின் மேற்கு பகுதிகளில் பெய்ய வேண்டிய தென்மேற்கு பருவமழை சரியாக பெய்யாததால் இப்பகுதி விவசாயிகள் தாமதமாக விவசாய பணிகளை மேற்கொண்டனர்.

கடந்த மாதம் இப்பகுதியில் பெய்த மழையின் காரணமாக குளங்கள் ஓரளவு நிரம்பியிருந்த போதிலும் இருக்கின்ற தண்ணீரை வைத்து உழவுபணி, விதை விதைக்கும் பணி, நடுவைப்பணி, மருந்து தெளித்தல் போன்ற விவசாய பணிகளை மேற்கொண்டனர். தாமதமாக போதிய நீரின்றி செய்த போதிலும் இப்பகுதியில் நெற்பயிர்கள் எங்கும் பச்சை பசேல் என்று கண்களுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் காணப்படுகிறது. வரும் மாதங்களில் அறுவடை பணி நடைபெற உள்ளது.

**சொட்டு நீர் பாசனத்துக்கு மாறும் விவசாயிகள் :தண்ணீர் சிக்கனம் மூலம் சாகுபடி பரப்பு அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2011,01:03 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பாசன நீர் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு விவசாயிகள் சொட்டு நீர் பானத்துக்கு மாறி வருகின்றனர். இறவை பாசன பகுதியில் தண்ணீர் சிக்கனத்தை கடைப்பிடித்து, சாகுபடி பரப்பை விவசாயிகள் அதிகரித்து வருகின்றனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில ஆண்டாய் பருவமழை சீரான முறையில் பெய்த போதும், நீர் நிலைகளில் நீர் சேமிப்பு தொடர்ந்து கேள்விக்குறியாகி வருகிறது. நீர் ஆதாரங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்பு காரணமாக ஏரி, குட்டைகளில் நீர் சேமிப்பு ஆண்டு முழுவதும் தேவைக்கு பயன்படுத்த முடியாத நிலையுள்ளது. மாவட்டத்தில் விவசாயம் பிரதானமாக இருந்த போதும், மேட்டுப்பாங்கான நில அமைப்பு, மானாவாரி நில ங்கள் பரப்பு அதிகம் உள்ளது.

பென்னாகரம், அரூர், தர்மபுரி, காரிமங்கலம், பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதியில் ஒரு காலத்தில் ஆற்றுப்படுகையில் பகுதியில் ஆறுகளில் இருந்து ஏரிகளுக்கு நீர் சேமிப்பு சாத்தியமாக இருந்தது. இதனால், இப்பகுதியில் ஏரி பாசன விவசாயம் செழிப்படைந்திருந்தது. தற்போது, ஏரி பாசன விவசாயம் கேள்விக்குறியான நிலையில் இறவை பாசனத்திலும் தண்ணீர் தேவை ஆண்டு முழுவதும் கிடைக்காமல் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம் சராசரியாக நான்கு அடி குறைந்து வருகிறது. தற்போது, ஆற்றுப்படுகை பகுதியில் 100 அடிக்கு கீழ் நிலத்தடி நீர் மட்டம் இருந்த போதும், ஆண்டு முழுவதும் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க 800 அடி வரையில் விவசாயிகள் போர் அமைத்து தண்ணீர் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றனர். விவசாயத்துக்கு நீர் தேவை அதிக முக்கிய பங்களிக்கிறது.

பெரும்பாலும் நீர் தேவைகள் பூர்த்தி செய்ய முடியாத நிலங்களில் விவசாயிகள் எதிர்பார்த்த மகசூலை பெற முடியாமல் நஷ்டம் அடைந்து வருகின்றனர். விவசாய தேவைக்கான முழு நீர் ஆதாரங்களை பெற வசதியாக பல விவசாயிகள் சொட்டு நீர் பானத்துக்கு மாற துவங்கியுள்ளனர். பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் ஆகிய தாலுகா பகுதியில் இறவை பாசன விவசாயிகள் 40 சதவீதம் பேர் சொட்டு நீர் பாசனத்துக்கு மாறியிருப்பதோடு, இதனால், சாகுபடி பரப்பு அதிகரிக்க முடிந்ததாக கூறி வருகின்றனர். குறிப்பாக பாலக்கோடு தாலுகாவுக்கு உட்பட்ட

பகுதியில் விவசாயிகள் மஞ்சள், குச்சி கிழங்கு உள்ளிட்ட பயிர்கள் இறவை பாசனத்தில் சாகுபடி செய்துள்ளனர். இதில், பெரும்பாலான விவசாயிகள் சொட்டு நீர் பாசன முறையை கடைப்பிடித்து வருவதால், கோடை காலங்களில் கூட பாசன நீர் தேவை பூர்த்தி செய்து ஆண்டு முழுவதும் சுழற்சி முறையில் சாகுபடி செய்து லாபம் அடைந்து வருகின்றனர்.

இது குறித்து செல்லியம்பட்டியை சேர்ந்த விவசாயி செவத்தான் கூறுகையில்,""சொட்டு நீர் பாசனம் மூலம் நீர் விரையம் தடுக்கப்படுவதோடு, தோட்டங்களில் செடிகளுக்கு தேவையான நீர் முறையாக செல்வதால், செடிகளும் நன்கு வளர்ந்து நல்ல மகசூலை கொடுக்கிறது. சொட்டு நீர் பாசனம் அமைக்க தோட்டக்கலை துறை மூலம் மானியம் வழங்கப்படுவதால், சிறு விவசாயிகளும் இந்த முறைக்கு மாறி ஆண்டு முழுவதும் பாசனத்துக்கு தேவையான நீர் நிர்வாகத்தை முறைப்படுத்த முடியும்," என்றார்.

## பட்டு விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2011,01:07 IST

கிருஷ்ணகிரி: வேப்பனப்பள்ளி ஒன்றியம் கொல்லப்பள்ளி கிராமத்தில் பட்டு வளர்ச்சி துறையின் சார்பில் கிரியா ஊக்கி திட்டத்தின் கீழ் பட்டு விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம் நடந்தது. கிருஷ்ணகிரி பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் கதிர்வேலு தலைமை வகித்தார். வேப்பனப்பள்ளி ஆய்வாளர் ரங்கநாதன் முன்னிலை வகித்தார். மத்திய பட்டு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி மாசிலாமணி புழு வளர்ப்பு, மருந்தடிப்பு, தோட்டபராமரிப்பு, மண் பரிசோதனையின் அவசியம் குறித்தும், கிருஷ்ணகிரி வித்தக உதவி இயக்குனர் அழகேசன் பட்டு முட்டைகள் அடைகாத்தல் மற்றும் பட்டு முட்டைகள் கையாளும் முறை குறித்து விளக்கி பேசினார்கள். வனவர் சுப்பிரமணி வனக்குழுக்கள் மூலம் பட்டுவளர்ப்பில் பயன்கள் குறித்து பேசினார். உதவி இயக்குனர் கதிர்வேலு பட்டுவளர்ச்சி துறையில் அரசின் நலதிட்ட உதவிகள், மானியங்கள் மற்றும் வெண்பட்டுவளர்ப்பு, மரமல்பரி வளர்த்தல், ஊசி ஈ கட்டுப்படுத்த தைமஸ் ஒட்டுண்ணி பயன்படுத்தும் முறை குறித்து விளக்கி பேசினார். முகாமில், கொல்லபள்ளி மற்றும் சுற்றுவட்டார கிராமத்தை சேர்ந்த பட்டு விவசாயிகள் பலர் கல்நது கொண்டனர். இவர்களுக்கு பட்டு வளர்ப்பு கையேடு இலவசமாக வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை இளநிலை ஆய்வாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, பெரியசாமி, கோவிந்தராஜ், நாராயணசாமி, வெங்கடேசன் ஆகியோர் செய்திருந்தனர். இளநிலை ஆய்வாளர் மோமீன்கான் நன்றி கூறினார்.

**தோட்டக்கலை துறை ரூ.4.73 கோடி மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2011,00:51 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நடப்பாண்டு தோட்டக்கலைத்துறை மூலம் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 4.73 கோடி ரூபாய் மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ், நடப்பாண்டு தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, நான்கு கோடியே 72 லட்சத்து 94 ஆயிரத்து 200 ரூபாய் மானியம் வழங்க நிதி பெறப்பட்டுள்ளது. மா அடர்நடவு, சாதாரண இடைவெளியில் மா நடவு, நெல்லி, பப்பாளி, எலுமிச்சை, தென்னையில் ஊடுபயிராக வாழை, திசு வாழை, கோகோ, குமிழ் மலர்கள், மஞ்சள், வெங்காயம் மற்றும் குருமிளகு ஆகிய பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தவிர, கடந்தாண்டில், நடவு செய்யப்பட்ட மா, நெல்லி, கோகோ ஆகிய பயிர்களை பராமரிக்க மானியமும் வழங்கப்படுகிறது. பிளாஸ்டிக் மூடாக்கு செய்யவும், மண்புழு உரக்கூடம் அமைத்தல், தேனீக்கள் வளர்ப்பு மற்றும் தேனீக்கள் பெட்டி அமைக்கவும் மானியம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய தோட்டக்கலை இயக்ககத்தில், தகுதியான பயனாளிகள் தேர்வு செய்யும் பணி, ஈரோடு மாவட்டத்தில் அனைத்து வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, தோட்டக்கலை பயிர் செய்யும், தகுதி உள்ள விவசாயிகள் அனைவரும், தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ், மானியம் பெற்று பயனடைய கலெக்டர் காமராஜ் கேட்டுக் கொண்டார்.

**சொட்டுநீர் பாசனத்திற்கு கூடுதலாக 25 சதவீதம் மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,23:33 IST

செய்துங்கநல்லூர் : சொட்டுநீர் பாசனத்திற்கு 25 சதவீதம் மானியம் கூடுதலாக வழங்க அரசு உத்திரவிட்டுள்ளதாக அதிகாரி தெரிவித்துள்ளார். கருங்குளம் யூனியனில் சென்னா விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் விழா நடந்தது. இவ்விழாவுக்கு தலைமை வகித்த தூத்துக்குடி தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் செய்யது முகமது மிராஞ்சி பேசியதாவது. புதிய அரசு பதவி ஏற்றவுடன் வேளாண்மைத்துறை அமைச்சர் எங்களுக்காக ஒரு கூட்டத்தை நடத்தினார். அப்போது அவர் நிர்வாகத்தில் நாங்கள் தலையிடமாட்டோம், ஆனால் விவசாயிகளுக்கு எவ்வளவு நன்மை செய்ய முடியுமோ அவ்வளவு நன்மைகளை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தோட்டக்கலைதுறை மூலம் சொட்டு நீர் பாசனத்திற்கு இதுவரை 50 சதவீத மானியம்

வழங்கப்படுகிறது. இது இனிமேல் 75 சதவீதமாக வழங்கப்படும். இலவசமாக வழங்க அரசு ஆலோசித்து வருகிறது. எனவே விவசாயிகள் சொட்டுநீர்பாசன முறையை கடைபிடிக்க வேண்டும். விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் சரியான இடுபொருளை சரியான அளவில் தரமானதாக வழங்கவேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பழமரக்கன்றுகள், காய்கறி விதைகள் ஆகியவை காலதாமதாக இதுவரை வந்து கொண்டிருந்தது. ஆனால் இப்போது ஆடிப்பட்டத்தில் வேண்டும் என்று கேட்டுக்கொண்டதின் காரணமாக அரசு உடனே ஏற்பாடு செய்துள்ளது. 50 சதவீத மானியத்தில் அவைகளை பெற்றுக்கொள்ளலாம். விரைவில் அடர் நடவுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் விவசாயிகளுக்கு வர உள்ளது. தரமான விவசாயம் செய்ய எங்கள் துறை தக்க ஆலோசனை வழங்க உள்ளது. மேலும் இங்குள்ள மக்கள் பிரதிநிதிகளும் அதில் அதிக ஆர்வத்துடன் இருக்கின்றனர். எனவே விவசாயிகளுக்கு எந்த நேரத்திலும் எந்த சந்தேகம் மற்றும் உதவிகளை எங்கள் துறை அலுவலர்களிடம் கேட்டுக்கொள்ளலாம் என்று கூறிக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

**வெங்காயம் கொள்முதல் விலை சரிவு மத்திய அரசு மீது விவசாயிகள் கோபம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,23:05 IST

பொங்கலூர் : ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளால் வெங்காயம் விலை கடுமையாக சரிந்துள்ளதால், மத்திய அரசின் மீது விவசாயிகள் கோபம் அடைந்துள்ளனர்.கடந்தாண்டு டிச., மாதம் வெங்காயம் விலை கிலோ 80, 90 ரூபாய் என தாறுமாறாக விற்பனையானதால், மத்திய அரசு ஏற்றுமதிக்கு தடை விதித்தது. வெங்காய விளைச்சல் அதி கரித்த பின், தடை விலக்கி கொள்ளப்பட்டது. வெங்காய ஏற்றுமதி, இறக்கு மதி கொள்கையை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வெளிநாட்டு வர்த்தக இயக்குனரகம் மேற்கொண்டு வருகிறது. ஏற்றுமதிக்கான தடை நீக்கப்பட்டாலும், உள்ளூரில் விலை ஏறக் கூடாது என்பதற்காக ஏற்றுமதி மீதான வெங்காயத்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால், போட்டி நாடுகளின் வெங்காயம், நமது நாட்டு வெங்காயத்தின் விலையை விட, குறைவாக உலக மார்க்கெட்டில் கிடைப்பதால், நம் நாட்டு வெங்காயத்தை மற்ற நாடுகள் இறக்குமதி செய்வதில்லை. இதனால், உள்ளூர் மார்க்கெட்டிலேயே விற்பனை செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. தற்போது சீசன் காலம் என்பதால், கடந்த வைகாசி பட்டத்தில் சாகுபடி செய்த சின்ன வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. விற்பனை மந்தமாக இருப்பதாலும், லாரி ஸ்டிரைக் நடப்பதாலும் வெங்காயம் கொள்முதல் செய்வதில் வியாபாரிகள்

சுணக்கம் காட்டுகின்றனர். மேலும், கொள்முதல் விலையை மிகவும் குறைத்துக் கேட்கின்றனர். ஒரு கிலோ எட்டு ரூபாய் முதல் 14 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், வெங்காயம் அறுவடை செய்த விவசாயிகள் விற்பனை செய்ய முடியாமல் அவதிப்படுகின்றனர். உற்பத்தி செலவு அதிகரித்து விட்டதால், தற்போதைய மார்க்கெட் விலைக்கு விற்பனை செய்யும் விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். இதற்கு மத்திய அரசின் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடுகளே காரணம் என்பதால், விவசாயி களின் கோபம் மத்திய அரசின் மீது திரும்பியுள்ளது.வியாபாரிகள் கூறுகையில், "தற்போது அறுவடை சீசன் என்பதாலும், லாரி ஸ்டிரைக் நடப்பதாலும் விற்பனை மந்தமாக உள்ளது. ஏற்றுமதி செய்வதற்கான ஆர்டர் மற்றும் விலை பட்டியல் இன்னும் வந்து சேரவில்லை. இதனால், ஏற்றுமதி செய்ய முடியவில்லை. எனவே, உள்ளூர் மார்க்கெட்டில் விலை குறைவாக உள்ளது,' என்றனர்.

**பேரீச்சை சாகுபடி அமோகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,23:05 IST

பொங்கலூர் : பொங்கலூர் மற்றும் குண்டடம் பகுதியில் பேரீச்சை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். பேரீச்சையில் பல ரகங்கள் உள்ளன. இவற்றில் பர்ரி ரகம், திசு வளர்ப்பு முறையில் ஆய்வகங்களில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த ரக கன்றுகளை வாங்கும் நிலையில், விவசாயிகளின் பொருளாதாரம் இல்லாததால், நாற்று விட்டு நடவு செய்யும் ரகங்களை வாங்கி பயிர் செய்துள்ளனர். நன்றாக பராமரித்தால், மூன்று ஆண்டுகளில் காய்ப்புக்கு வந்து விடுகிறது.

இப்பகுதியில் இது புது வரவு என்பதால், விற்பனை செய்வதற்கான வழி தெரியாமல் விவசாயிகள் குழப்பம் அடைந்துள்ளனர். வடமலைபாளையத்தை சேர்ந்த விவசாயி குப்புசாமி கூறுகையில், ""மூன்று ஏக்கர் பரப்பளவில், ஏக்கருக்கு 100 கன்றுகள் வீதம் நடவு செய்தேன். மூன்றரை ஆண்டுகளில் காய்ப்புக்கு வந்து விட்டது. பேரீச்சையில் 300 ரகங்கள் இருப்பதாக சொல்கிறார்கள். எனது தோட்டத்தில், "மத்மியன்' என்ற ரகத்தை பயிர் செய்துள்ளேன். இதை பறித்து பதப்படுத்தாமல், மரத்தில் இருந்து பறித்ததும் அப்படியே சாப்பிடலாம். தென்னையை போல் தண்ணீர் விட்டு பராமரித்தால், நல்ல லாபம் கிடைக்கும்'' என்றார்.

**எண்ணெய் விலை உயர்ந்தது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,23:25 IST

திருப்பூர் : "வாட்' வரி உயர்த்தப்பட்டதையடுத்து கடந்த ஒரு மாதமாக மார்க்கெட்டில் அனைத்து எண்ணெய் ரகங்கள் விலையும் அதிகரித்து காணப்படுகிறது. ஒரு டின் (15 கிலோ) கடலை எண்ணெய் ரூ.1,530; நல்லெண்ணெய் 1,260; விளக்கு எண்ணெய் 1,900; ரீபைண்ட் ஆயில் 1,650; பாமாயில் 950; சன் பிளவர் ஆயில் 1,230; தேங்காய் எண்ணெய் 1,470 ரூபாய் என டின்னுக்கு 30 முதல் 50 ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளது.
எண்ணெய் வியாபாரிகள் கூறியதாவது: கால நிலை மாறுபாடு காரணமாக பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்து வருவதால், தற்போது எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி பெரி தும் பாதிக்கப்பட்டுள்ளது. லாரிகள் மூலமாகவே வெள்ளகோவில், காங்கயம், தேனி பகுதிகளில் இருந்து எண்ணெய் கொண்டு வரப்படுகிறது. இருப்பு அதிகம் உள்ளதால், லாரி ஸ்டிரைக் பெரிய அளவில் எண்ணெய் வர்த்தகத்தை பாதிக்கவில்லை. ஸ்டிரைக் நீடிக்கும் பட்சத்தில், அனைத்து எண்ணெய் ரகங்களும் இரு மடங்கு விலை உயரும் வாய்ப்புள்ளது, என்றனர்.

**மழை பெய்ததால் மானாவாரி கம்பு பயிர் அமோக விளைச்சல் : விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2011,22:24 IST

தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதியில் பெய்த மழை காரணமாக மானாவாரியில் பயிரிடப்பட்டுள்ள கம்பு பயிர் செழித்து வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் 5,000 ஏக்கர் பரப்பில் மானாவாரியில் விவசாயிகள் கம்பு பயிரிட்டுள்ளனர். கொழுப்பு சத்து இல்லாத உணவாக கம்பு உள்ளதால் இதனை பலரும் விரும்பி சாப்பிடுகின்றனர். கம்பு கூழ் சாப்பிடும் பிரியர்கள் அதிகரித்துள்ளதால் தெருவோர கூழ்கடைளில் கூட்டம் அலைமோதுவதை காண முடிகிறது. கோழி, மாட்டு தீவன உற்பத்திக்கு கம்பு முக்கிய மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது. இதனால் தற்பாது நல்ல விலை இதற்கு கிடைத்து வருகிறது.
பல ஆண்டுகளாக கம்பு சாகுபடி செய்வதை புறக்கணித்து வந்த தியாகதுருகம் பகுதி விவசாயிகள் பலரும் தற்போது, கம்பு பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வரு கின்றனர். மானாவாரி நிலங்களில் பருவமழை காலத்தில் கிடைக் கும் ஈரத்தை கொண்டு வளர்ந்து நல்ல மகசூலை தருகிறது. கடந்த மாதம் முதல் வாரத்தில் பெய்த மழை ஈரத்தை பயன்படுத்தி கம்பு விதைப்பு பணிகளை விவசாயிகள் முடித்தனர். செடிகளில் களை எடுத்து பராமரித்து வந்தனர். கடந்த சில வாரங்களாக மழை பெய்யாமல் வெயில் அதிகம் இருந்ததால் பயிர்கள் வாடிய நிலையில் காணப்பட்டது.

தற்போது பெய்துள்ள மழை காரணமாக கம்பு பயிர்களுக்கு போதிய நீர் கிடைத்ததால் செழித்து எங்கு பார்த்தாலும் "பச்சை பசேல்' என்று காட்சியளிக்கிறது. கம்பு கதிர்கள் பூக்கும் பருவத்தில் உள்ளதால் இன்னும் ஒரு மாதத்திற்குள் அறுவடைக்கு தயாராகிவிடும். தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளதால் போதிய தண்ணீர் கிடைத்து செழித்து மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால் கம்பு பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தினத் தந்தி

## கொள்முதல் விலையை அதிகரிக்க கோரி நடுரோட்டில் பாலை கொட்டி உற்பத்தியாளர்கள் போராட்டம்



பால் உற்பத்தியாளர்கள் நடுரோட்டில் பாலை கொட்டி போராட்டம் நடத்திய போது எடுத்த படம்.

*பெரும்பாவூர்,ஆக.23–*

கொள்முதல் விலையை அதிகரிக்க கோரி பால் உற்பத்தியாளர்கள் பாலை நடுரோட்டில் கொட்டி போராட்டம் நடத்தினார்கள்.

கொள்முதல் விலை உயர்த்த கோரிக்கை

கேரளாவில் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து மில்மா நிறுவனம் பால் கொள்முதல் செய்கிறது. பால் உற்பத்தியாளர்கள் தனியார் நிறுவனத்தை விட அரசு நிறுவனம் மிக குறைந்த விலையில் பாலை கொள்முதல் செய்கிறது. எனவே கூடுதலான விலையில் பாலை கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர்.இந்த நிலையில், எர்ணாகுளம் மாவட்டம், அடிமாலி பகுதியில் பால் உற்பத்தியாளர்கள் சிலர் கொள்முதல் விலையான 13 ரூபாயில் இருந்து கூடுதலாக 10 சதவீதம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர்.

பாலை கொட்டி போராட்டம்

இதை தொடர்ந்து நேற்று முன்தினம் பால் உற்பத்தியாளர்கள் பால் கொள்முதல் விலையை அதிகரிக்க கோரி நடுரோட்டில் பாலை கொட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

கொள்முதல் விலையை 10 சதவீதம் அதிகரிக்க கோரியும், மாட்டு தீவனத்தில் 50 சதவீதம் விலையை குறைக்க கோரியும் உற்பத்தியாளர்கள் போராடினார்கள். இதில் 100–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## லாரிகள் வேலை நிறுத்தம்: ஈரோட்டில் ரூ.135 கோடி பொருட்கள் தேக்கம் மஞ்சள் விற்பனை நிறுத்தப்பட்டது

ஈரோடு, ஆக.23–

லாரிகள் வேலை நிறுத்தம் காரணமாக ஈரோட்டில் ஜவுளி, எண்ணை, புண்ணாக்கு என ரூ.135 கோடி பொருட்கள் தேங்கி கிடக்கின்றன. மஞ்சள் விற்பனை முற்றிலும் நிறுத்தப்பட்டு உள்ளது.

லாரிகள் வேலை நிறுத்தம்

சுங்க வரி கட்டணத்தை சீரமைக்க வேண்டும், டீசல், டயர் மற்றும் லாரிக்கான உதிரி பொருட்கள் விலை உயர்வை தவிர்க்க வேண்டும் ஆகியவை உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தென் இந்திய லாரி உரிமையாளர்கள் கடந்த 4 நாட்களாக தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழகம் உள்பட 6 மாநிலங்களில் நடைபெற்று வரும் இந்த வேலை நிறுத்த போராட்டத்தால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்து உள்ளது. குறிப்பாக

காய்கறி, பழங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்து வருகிறது.

வர்த்தகம் பாதிப்பு

ஈரோடு மாவட்டத்தில் இருந்து ஜவுளி ஏற்றுமதி அடியோடு பாதிப்பு அடைந்து உள்ளது. ஈரோட்டில் இருந்து வடமாநிலங்களுக்கு லாரிகள் எதுவும் செல்லாததால் நாளொன்றுக்கு ரூ.50 கோடி ஜவுளி வர்த்தகம் பாதிக்கப்பட்டு உள்ளது. இதுபோல் நல்லெண்ணை, கடலை எண்ணை, புண்ணாக்கு ஆகியவையும் வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்ல முடியாமல் தேங்கி உள்ளன.

வெளி ஊர்களில் இருந்து விவசாயிகள் மஞ்சள் கொண்டு வர முடியாததாலும், வியாபாரிகள் வாங்கிய மஞ்சளை கொண்டு செல்ல வசதிகள் இல்லாததாலும் ஈரோட்டில் நேற்று மஞ்சள் வணிகம் நடைபெற வில்லை. ஈரோடு தனியார் மஞ்சள் வியாபாரிகள் சங்க மஞ்சள் விற்பனை கூடம், ஒழுங்கு முறை விற்பனை கூடம், மஞ்சள் விவசாயிகள் கூட்டுறவு விற்பனை கூடம் மற்றும் கோபி கூட்டுறவு விற்பனை கூடம் என 4 பெரிய மஞ்சள் விற்பனை நிலையங்களிலும் மஞ்சள் விற்பனை நிறுத்தப்பட்டது. லாரி வேலை நிறுத்தம் முடியும் வரை ஏலம் நடைபெறாது என்று ஒழுங்குமுறை மஞ்சள் விற்பனை நிலைய அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

ரூ.135 கோடி பொருட்கள் தேக்கம்

வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டு உள்ள பாதிப்பு குறித்து ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் என்.சிவநேசன் கூறியதாவது:–

ஈரோடு மாவட்டத்தில் இருந்து மஞ்சள், ஜவுளி, எண்ணை, புண்ணாக்கு என்று பல பொருட்கள் வட மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு வருகின்றன. கடந்த 3 நாட்களில் மட்டும் ஈரோட்டில் ரூ.135 கோடி மதிப்புள்ள பொருட்கள் தேக்கம் அடைந்து உள்ளன. ஜவுளி தினசரி ரூ.50 கோடிக்கும், எண்ணை தினசரி ரூ.4 கோடிக்கும், புண்ணாக்கு தினசரி சுமார் ரூ.75 லட்சத்துக்கும் ஏற்றுமதியாகி வந்தது. தற்போது இந்த பொருட்கள் அனைத்தும் அனுப்ப முடியாமல் தேங்கி கிடக்கின்றன. மஞ்சள் விற்பனை அடியோடு நிறுத்தப்பட்டு விட்டது.

தொழில் பாதிப்பு

ஈரோட்டில் தற்போது சாயத்தொழிலுக்கு தடை உள்ளதால், ஜவுளி உற்பத்தியாளர்கள் குஜராத் மற்றும் மராட்டிய மாநிலங்களுக்கு சாயமிட கொடுத்த ஜவுளிகள் திரும்ப வராமல் உள்ளன. இதனால் ஓணம், விநாயகர் சதுர்த்தி விழாக்களுக்கு எடுத்த ஆர்டர்கள் கொடுக்க முடியாத நிலை உள்ளது. ஜவுளி தொழிலுக்கு மிகப்பெரிய பாதிப்பாக உள்ளது. பொருட்களை ரெயில்கள் மூலம் அனுப்பலாம் என்றால், போதிய கிடங்கு வசதிகள் இல்லை. எனவே இந்த பிரச்சினைக்கு தீர்வு காண தமிழக

முதல்–அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் என்.சிவநேசன் கூறினார்.

ஈரோட்டில் இருந்து வெளி மாநிலங்கள் செல்லும் லாரிகள் ஈரோடு நரிப்பள்ளத்தில் உள்ள லாரி நிறுத்தத்தில் கடந்த 4 நாட்களாக நிறுத்தப்பட்டு உள்ளன. லாரி டிரைவர்கள் சிலர் அங்கேயே சமைத்து சாப்பிட்டுக்கொண்டும், பொழுது போக்குவதற்காக தாயம், சீட்டு போன்ற விளையாட்டுகள் விளையாடிக்கொண்டும் உள்ளனர்.

## விளைச்சல் அதிகரிப்பால் தேங்கி கிடக்கும் தக்காளி



விளைச்சல் அதிகரிப்பால் தக்காளியின் வரத்து அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக கோவையில் உள்ள அண்ணா மொத்த காய்கறி மார்க்கெட்டில் கூடை கூடையாக தேங்கி கிடக்கும் தக்காளிகளை படத்தில் காணலாம்.

## கொலக்கம்பை பகுதிகளில்

# பஜ்ஜி மிளகாய் பயிரிடும் விவசாயிகள்

கொலக்கம்பை, ஆக.23–

கொலக்கம்பை பகுதி விவசாயிகள் தற்போது பஜ்ஜி மிளகாய் பயிரிட அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

### விலை வீழ்ச்சி

நீலகிரி மாவட்டத்தின் பணப்பயிராக விளங்கி வந்த பச்சை தேயிலைக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்பு கடுமையான விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இதன் விளைவாக இதனை நம்பி இருந்த சிறு, குறு தேயிலை விவசாயிகள் பெரும் பொருளாதார நெருக்கடி சிக்கி தவித்தனர்.

இதனையடுத்து அப்போதைய அரசு விவசாயிகள் மாற்றுப்பயிர் மேற்கொள்ள ஊக்கம் அளித்தது. அதன்படி சில விவசாயிகள் மலை தோட்ட காய்கறி பயிர்களும், கொய்மலர் சாகுபடியும் செய்ய தொடங்கினர்.

### காய்கறிகள்

இதன்படி கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான தூதூர்மட்டம், கேத்தி பாலாடா, கரும் பாலம், சட்டன், அதிகரட்டி உள்ளிட்ட பகுதிகளில்உள்ள ஏராளமான விவசாயிகள் தங்களின் தேயிலை செடிகளை அகற்றி விட்டு காய்கறிகள் பயரிட தொடங்கினார்.

தேயிலை செடிகளின் இடையே மலை தோட்ட காய்கறி பயிர்களான பீன்ஸ், உருளைக்கிழங்கு, கேரட், மேரக்காய், பஜ்ஜி மிளகாய் போன்றவற்றை விவசாயம் செய்து அதன் மூலம் தங்களின் குடும்பங்களை பராமரித்து வருகின்றனர்.

### பஜ்ஜி மிளகாய்

இதில் தற்போது கொலக் கம்பை பகுதிகளில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் தங்களின் விவசாய நிலங்களில் பஜ்ஜி மிளகாய் பயிர் செய்து வருகின்றனர். தற்போது நிலவும் தட்ப வெப்ப நிலைக்கு இந்த மிளகாய் நன்கு மகசூல் அளித் துள்ளது. இதனை அறுவடை செய்து மேட்டுப் பாளையம், ஊட்டி பகுதிகளில் உள்ள மொத்த காய்கறி மண்டிக்கு எடுத்து சென்று விற்பனை செய்து வருகின்றனர். தற்போது பஜ்ஜி மிளகாய் கிலோ ஒன்றுக்கு ரூ.25 முதல் ரூ.40 வரை விற்பனையாகி வரு கிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



கொலக்கம்பை பகுதியில் உள்ள ஒரு தோட்டத்தில் பஜ்ஜி மிளகாய் பயிரிடப்பட்டுள்ள காட்சி.